Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 80 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | டிசம்பர் 22, 2020

## கிளிநொச்சியில் ஒரே குடும்பத்தில் இருவருக்கு கொரோனா

கிளிநொச்சியில் மேலும் இரண்டு பேருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை இன்று கண்டறிப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் என இரண்டு 03

## தமிழ் அரசியல் கைதிகள் 35 பேருக்கு கொரோனாத் தொற்று?

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 35 இற்கும் அதிகமானவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலையை மேற்கோள் காட்டும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள வைத்தியர் ஒருவர் உள்ளடங்கலாக 35 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

நேற்று வரையில் 20 பேர் தொற்றுக்கு உள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டிருந்ததாகவும் இன்று மேலும் 15 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

தொற்றுக்குள்ளானவர்கள் கந்தக்காடு கொரோனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 03

## பண்டிகைக் காலத்தில் ஊரடங்கு இல்லை



கிறிஸ்துமஸ், ஆங்கிலப் புத்தாண்டு உள்ளிட்ட பண்டிகைக் காலங்களில் நாட்டில் தனிமைப்படுத்தப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்படுமா என்பது தொடர்பில் கோவிட்19 கட்டுப்பாட்டு தேசிய செயல்பாட்டு மையத்தின் 03

# மட்டக்களப்பில் கடும் மழை பல பகுதிகள் வெள்ளத்தில்

### 48 மணித்தியாலத்தில் 341 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி



மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் பல பகுதிகளுக்கான போக்குவரத்துகளும் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. 03

## கொரோனா மரணம் 181 ஆக அதிகரிப்பு இன்றும் 5 மரணங்கள்!

இலங்கையில் கொவிட்-19 தொற்று தொடர்பான மேலும் 5 மரணங்கள் பதிவாகியுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன இன்று (22) அறிவித்துள்ளார். 03

## கிழக்கில் மூன்றாவது கொரோனா மரணம் பதிவு

கொரோனா தொற்றின் காரணமாக கிழக்கு மாகாணத்தில் மற்றுமொரு உயிரிழப்பு நேற்று (21) திங்கட்கிழமை பதிவாகியுள்ளதாக தெரிவிக்கின்றது.

சாய்ந்தமருது, வெலிவேரியன் பிரதேசத்தினைச் சேர்ந்த 58 வயது நபரே இன்று உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த 03

## வடமராட்சி கிழக்கில் சவுக்கு மரம் வெட்டிய 13 பேர் கைது

மூன்று வாகனங்களில் யாழ். வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப் பகுதிக்குச் சென்று சவுக்கங்காட்டில் சவுக்கு மரங்களை வெட்டி வாகனங்களில் ஏற்றிய 13 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனனர்.

அந்தப் பகுதி மக்கள் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய பருத்தித்துறைப் பொலிஸார் அவர்களை கைது செய்து பருத்தித்துறை பொலிஸ் நிலையம்கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் விசாரணை இடம்பெற்றுவரும் நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பின்னர் விபரம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


கைது செய்யப்பட்டவர்கள் நல்லூர், யாழ்ப்பாணம், மானிப்பாயைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

## மாடு கடத்திகள் இருவர் கேரதீவு படையினரால் கைது 15 மாடுகள் மீட்பு



கிளிநொச்சியிலிருந்து எந்தவொரு அனுமதியும் பெறாமல் யாழ்ப்பாணத்திற்கு கடத்திவரப்பட்ட 15 மாடுகள் கேரதீவு - சங்குப்பிட்டி பகுதியில் பாதுகாப்பு தரப்பினால் கைப்பற்றப்பட்டுள்ளது. 03





## நீர் வரத்து அதிகரிப்பு இரணைமடுவின் இரு வான் கதவுகள் திறப்பு

இரணைமடுக் குளத்தின் இரண்டு வான் கதவுகள் 5 மணியளவில் 6 அங்குலங்களால் திறக்கப்பட்டுள்ளது.

இணைமடு நீரேந்தும் பகுதியில் பெய்த மழை காரணமாக நீர் வருகை அதிகரித்தமையால் திறந்து விடப்பட்டுள்ளதாக நீர்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்டோர் குளத்தைப் பார்வையிட்டு பின்னர் கதவுகளை திறந்துவிட்டனர்.

36 அடிகொள்ளளவு கொண்ட குளம் 33 அடி 06 அங்குலமாக தற்போது காணப்படுகிறது.

நீர் வருகை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் மேலும் கதவுகள் திறக்கப்படும் எனவும், மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.




## தரணி எங்கும் தமிழராய் இணைவோம்





## பலாலி விமான நிலையத்திற்கு தந்தை செல்வாவின் பெயரை சூட்டுமாறு கோரிக்கை

பலாலி விமான நிலையத்திற்கு தந்தை செல்வாவின் பெயரை சூட்டுமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம், வீ. ஆனந்தசங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ள அவர், "இலங்கை வாழ் அனைத்து இன மக்களின் நன்மதிப்பைப்பெற்று 'ஈழத்து காந்தி' என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவர் தந்தை செல்வா.

1947ஆம் ஆண்டு இலங்கையின் முதல் நாடாளு மன்றத்திலே அங்கம் வகித்தவர். சட்டத் துறையில் மிகவும் புகழ் பெற்று பிரித்தானியாவின் ஆட்சிக் காலத்திலேயே சட்டவல்லுனராக திகழ்ந்தவர்.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு சமஷ்டி முறையிலான ஒரு தீர்வே சிறந்தது என கூறிவந்தாலும் அதற்கு மாற்றாக இனப்பிரச்சனையை சுமூகமாக தீர்க்கும் நோக்கத்தோடு 'பண்டா செல்வா' மற்றும் 'டட்லி செல்வா' ஒப்பந்தங்களை செயற்படுத்த அன்றைய அரசுகளுக்கு ஆலோசனைகளை முன்வைத்தார்.

துரதிஷ்டவசமாக அவரின் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளாததால் நமது நாடு மிகப் பெரும் அழிவை சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

தன்னலம் கருதாது நாட்டையும் மக்களையும் நேசித்த ஒரு ஒப்பற்ற தலைவர் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பவர்.

ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்காக 'தமிழரசுக் கட்சியை' ஸ்தாபித்தார். அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களை உணர்ந்து ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காக அனைத்து தமிழ் மக்களையும் ஒன்று திரட்டி 'தமிழர் விடுதலைக் கூட்டணியை' 1972ம் ஆண்டு ஸ்தாபித்தார். இறுதிவரை மக்களுக்காகவே வாழ்ந்து மறைந்தார்.

இவ்வாறான தலைவர்களை நாடும் மக்களும் மறந்து விடக்கூடாது. அவரின் பெயர் என்றென்றும் நிலைத்திருக்க பலாலி விமான நிலையத்திற்கு 'தந்தை செல்வா சர்வதேச விமான நிலையம்' என பெயர் சூட்ட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மேல் மாகாணத்தை முடக்குங்கள்

இலங்கையில் கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, மேல் மாகாணத்தை முடக்குமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் கொரோனா தொற்றின் மையமாக கொழும்பு மாறிவிட்டது என்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது,

எனவே பண்டிகை காலங்களில் கொரோனா தொற்று மேலும் பரவாமல் தடுக்க குறைந்தபட்சம் ஜனவரி 1 ஆம் திகதி வரை மேல் மாகாணத்தை முடக்க வேண்டும் என்றும் அச்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிறிஸ்மஸ் மற்றும் ஆண்டு இறுதி விடுமுறை நாட்களில் மேல் மாகாணத்திலிருந்து பயணங்களை மேற்கொள்வதால் கொரோனா தொற்று மற்ற மாகாணங்களுக்கும் பரவக்கூடும் என்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இருப்பினும் எதிர்வரும் நாட்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தல் அல்லது பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்த எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என இராணுவ தளபதி இன்று (செவ்வாய்க்கிழமை) அறிவித்துள்ளார்.



## யாழ். பல்கலைக்கழகத்தில் திருவெண்பா ஓதுதல் நிகழ்வு ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் திருவெண்பா ஓதுதல் நிகழ்வு இன்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் ஸ்ரீசற்குணராஜாவின் அனுமதியுடன் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தன் ஆதரவுடன் கலைப்பீட 40 அணி மாணவர்களினால் திருவெண்பா ஓதுதல் நிகழ்வு இன்று ஆரம்பிக்கபட்டது.

இன்றைய கொரோனா கால சூழ்நிலையில் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து இந் நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தங்களுடன் அனைத்து மாணவர்களையும் இணைந்து கொள்ளுமாறும் மற்றும் அனைத்து விரதங்களையும் சிறப்பாக பல்கலைக் கழகத்தில் அனுஸ்டிக்க பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரிக்கையும் விடுத்துள்ளனர்.

தலைவாசல் Thalaivaasal

## தினம் ஒரு ஆரோக்கிய தகவல்

வயதிற்கேற்ற தடுப்பூசிகளை தவறாது குழந்தைகளுக்கு வழங்க வேண்டும். குழந்தை பிறந்தது முதல் தொற்றுநோய்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. குறித்த வயது குழந்தைகளுக்கு அதிகமாக தொற்ற வாய்ப்பு உள்ள நோய்களுக்கு எதிராக அந்தந்த வயதில் தடுப்பூசிகள் கட்டாயம் வழங்க வேண்டும். இலங்கையில் எந்த பிரதேசத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நடாத்தப்படும் சிகிச்சை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். செல்லும் போது குழந்தையின் வளர்ச்சி விருத்திப் பதிவேட்டினை எடுத்துச் செல்ல வேண்டும்.

**வைத்தியகலாநிதி**
**கோ.றஜீவ்**

## யாழ். பல்கலையில் கொரோனா சோதனை: எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ பீட ஆய்வு கூடத்தில் இன்றைய தினம் 120 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்ட நிலையில் அனைவருக்கு தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது.

இந்த தகவலை வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அதிக கோரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட உடுவிலில் பெறப்பட்ட 120 பேரின் மாதிரிகளில் எவருக்கும் தொற்று இல்லை என்று அறிக்கை கிடைத்துள்ளது.

மருதனார்மடம் கோரோனா வைரஸ் கொத்தணியில் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுடன் நேரடித் தொடர்புடைய தனிமைப்படுத்தப்பட்டுள்ள 120 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உள்படுத் தப்பட்டன.

அவர்கள் 120 பேருக்கும் தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

# மன்னாரில் 46 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகள் மீட்பு



மன்னாரில் 46 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகளை பொலிஸார் மீட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பாக இருவரை கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக அடம்பன் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரனைகளுக்கு அமைவாக, சுமார் 46 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஸ் பொலிஸ் அத்தியட்சகர் பன்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில் அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்ஸ்மன் ரணவல ஆராய்ச்சி தலைமையிலான பொலிஸ் குழுவினர், மன்னார்- யாழ்ப்பாணம் ஏ-32 பிரதான வீதியில் நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) பயணித்த டொல்பின் ரக வாகனத்தை சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது சூட்சுமமான முறையில் குறித்த வாகனத்தின் இருக்கைகளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 14 கிலோ 600 கிராம் கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதோடு, மன்னார் சாந்திபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சாரதி கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் விடத்தல்தீவு மீன் வாடி பகுதியில் 5 கிலோ 95 கிராமும் அதனைத் தொடர்ந்து மோழி என்னும் பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடன் நடத்திய தேடுதலில் அப்பகுதியில் இருந்து 26 கிலோ 790 கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் 48 வயதுடைய சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், சுமார் 46 கிலோ 485 கிராம் கேரளா கஞ்சாவும் அதனை கொண்டு செல்ல பயன்படுத்திய வாகனமும் கைப்பற்றப் பட்டுள்ளது.

மேலதிக விசாரனைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை, மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குப்பையோடு கிடந்த பணம் மீட்பு

கல்முனை மாநகர சபையின் திண்மக்கழிவ கற்றல் சேவையின்போது ஒரு வீட்டில் இருந்து ஒப்படைக்கப்பட்ட குப்பை பொதியினுள் தெரியாமல் சென்றிருந்த 150,000 ரூபா பணம், அவ்வீட்டு உரிமையாளருக்கு மீளக்கிடைத்த சம்பவம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை(22) கல்முனை நகர மண்டப வீதியில் இடம் பெற்றுள்ளது.

குறித்த வீட்டு உரிமையாளர் இன்று தனது தங்க ஆபரணமொன்றை வங்கியில் அடகு வைத்து, 150,000 ரூபா பணத்துடன் வந்துள்ளார். அதேநேரம் திண்மக்கழிவுகளை சேகரிக்கும் வாகனம் வந்தபோது குப்பையோடு குப்பையாக பணமும் தெரியாமல் குப்பைப் பொதிக்குள் போயுள்ளது. அக்குப்பைப்பொதி அவ்வாகனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாகனம் சென்று நீண்ட நேரத்தின் பின்னர் இவ்விடயம் உணரப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதி திண்மக்கழிவகற்றல் சேவை மேற்பார்வையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அவர் உடனடியாக செயற்பட்டு, வாகன சாரதி மற்றும் ஊழியர்களின் உதவியுடன் குறித்த திண்மக்கழிவகற்றல் வாகனத்தில் சேகரிக்கப்பட்ட அனைத்து கழிவுக் குப்பைப் பொதிகளையும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஆராய்ந்து, பணத்தை தேடிக் கண்டுபிடித்து உரிய நபரிடம் ஒப்படைத்துள்ளார்.

# குழந்தை வியாபார மோசடிக் கும்பல் பொலிஸ் வலையில் சிக்கியது



கர்ப்பிணி பெண்களை சில ஒப்பந்தங்களுக்கு உற்படுத்தி அவர்களுடைய குழந்தைகளை விற்பனை செய்யும் மோசடி வியாபாரம் ஒன்று தொடர்பில் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

குழந்தைகள் மற்றும் மகளிர் பொலிஸ் பணியகத்தின் நீண்ட விசாரணையின் பின்னர் குறித்த மோசடியில் ஈடுபட்ட 47 வயதுடைய நபர் ஒருவர் நேற்று (21) மாத்தளை, உக்குவெல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இணையத்தின் ஊடாக விளம்பர காணொளி ஒன்றை தயாரித்து குறித்த நபர்கள் இந்த மோசடியை மொரட்டுவ பகுதியில் இரண்டு இடங்களில் நடத்திச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு வழிகளில் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட பெண்களை சந்தேக நபர் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு அழைத்து, ஒப்பந்தங்களுக்கு உட்படுத்தப்பட்டு குழந்தைகள் பிறந்தவுடன் குறித்த குழந்தைகளை மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்வதாக அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் இந்த மோசடியை 'பேபி பார்ம்" என குறிப்பிடுவதாகவும் இதனுடன் தொடர்புடைய 12 கர்ப்பிணி பெண்களை பொலிஸார் இனங்கண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களுள் 5 பேரின் குழந்தைகள் இதுவரையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், மூன்று குழந்தைகளுடன் தாயார் இருப்பதாகவும் மேலும் 12 கர்ப்பிணி பெண்கள் சந்தேக நபரின் கட்டுப்பாட்டில் இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் அவ்வாறு சுமார் 30 குழந்தைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சடலங்களைப் பாதுகாக்க கொள்கலன்கள் தயார்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை பாதுகாப்பாக வைப்பதற்காக குளிர்சாதன வசதிகள் அடங்கிய 5 கொள்கலன்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

முஸ்லிம்களின் தனிப்பட்ட நன்கொடையாக இந்த கொள்கலன்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய குறித்த குளிர் கொள்கலன்களில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மரணித்த 5 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக மரணிக்கும் முஸ்லிம்களின் சடலங்களை தகனம் செய்வது தொடர்பில் பி.சீ.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கை கிடைக்கப்பெறும் வரையில் இதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நீதியமைச்சிடம் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழ் அரசியல்...

இதேவேளை மேலும் பல கைதிகள் காய்ச்சல் உட்பட்ட நோய்த் தாக்கங்களுடன் காணப்படுகின்ற போதிலும் அவர்கள் பரிசோதனையை புறக்கணிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## கிழக்கில்...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவருக்கு மேற்கொள்ளப்பட்ட அண்டிஜன் பரிசோதனையின் மூலம் கொரோனா உறுதி செய்யப் பட்டுள்ளது.

இதற்கமைய, கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்த மூன்று பேர் இதுவரை கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

## மாடு கடத்திகள்...

குறித்த பகுதியில் உள்ள சோதனை சாவடியில் பாரவூர்தி ஒன்றை சோதனையிட்டபோதே மாடு கடத்தப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்போது மாடுகளை கடத்திவந்த குற்றச்சாட்டியல் முஸ்லிம் நபர் ஒருவரும், தமிழ் நபர் ஒருவரும் பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களும், கைப்பற்றப்பட்ட மாடுகள் மற்றும் பாரவூர்தி ஆகியனவும் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

## கொரோனா மரணம்...

இலங்கையில் ஏற்கனவே 176 கொரோனா மரணங்கள் பதிவான நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 5 மரணங்களுடன், இலங்கையில் இதுவரை 181 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அறிவிக்கப்பட்டவர்களில் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் (20), 2 பேர் சனிக்கிழமையும் (19), ஒருவர் வெள்ளிக்கிழமையும் (18), ஒருவர் வியாழக்கிழமையும் (17) மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

177ஆவது மரணம்:

வெலிக்கடை சிறைக்கைதியான 68 வயதான ஆண் ஒருவர், சிறைச்சாலை வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார். அவரது மரணம் கடந்த வியாழக்கிழமை (17) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா, என அறிவிக்கப்பட்டுள்ளது.

178ஆவது மரணம்:

கொழும்பு 15ஐச் (மட்டக்குளிஃமோதறை) பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார். அவரது மரணம் கடந்த சனிக்கிழமை (19) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா மற்றும் உக்கிரசிறுநீரக தொற்று, என அறிவிக்கப்பட்டுள்ளது.

179ஆவது மரணம்:

தர்கா நகர் பிரதேசத்தைச் சேர்ந்த 77 வயதான ஆண் ஒருவர், வீட்டில் வைத்து மரணமடைந்துள்ளார். அவரது மரணம் கடந்த வெள்ளிக்கிழமை (18) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 தொற்றுடனான குருதி விசமடைவு மற்றும் இருதய நோய் நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

180ஆவது மரணம்:

மக்கொன பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதான பெண் ஒருவர், வீட்டில் மரணமடைந்துள்ளார். அவரது மரணம் கடந்த சனிக்கிழமை (19) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 தொற்றினால் ஏற்பட்ட குருதி விசமடைவு மற்றும் நீரிழிவு, அதிக இரத்த அழுத்தத்துடன் இருதய நோய் நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

181ஆவது மரணம்:

கொழும்பு 10 (மருதானைஃ மாளிகாவத்தை) பிரதேசத்தைச் சேர்ந்த 83 வயதான ஆண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையிலிருந்து, கொவிட்-19 தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு மரணமடைந்துள்ளார். அவரது மரணம் நேற்றுமுன்தினம் (20) நிகழ்ந்துள்ளது. அவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா, என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில்...

பேருக்கே இவ்வாறு கண்டறிப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிக்குச் சென்ற குடும்பத்தலைவர் ஒருவரிடம் மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் பரிசோதனைக்கு உள்படுத்தப்பட்டதில் தொற்றுக்கான அறிகுறிகள் அறியப்பட்டன.

பாரவூர்திச் சாரதியான அவர் அன்றைய தினமே வத்தளைக்குச் சென்றிருந்ததால் அவரது குடும்பம் தனிமைப்படுத்தப்பட்டது. அவர்களிடம் பிசிஆர் பரிசோதனை பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்ட முதலாவது பரிசோதனையில் மீளவும் மாதிரிகள் பெறுமாறு ஆய்வுகூடத்தினால் அறிவுறுத்தப்பட்டது.

அதனடிப்படையில் மீளவும் மாதிரிகள் பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் ஆண் ஒருவருக்கும் பெண் ஒருவருக்கும் கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், சாரதியின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்காக இன்று பெறப்பட்டுள்ளது. அவரது பரிசோதனை அறிக்கை நாளை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மட்டக்களப்பில்...

இன்று(22) காலை 8.30 மணிவரையான 48மணித்தியாலங்களில் இம்மாவட்டத்தில் 341 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் கன மழை காரணமாக மட்டக்களப்பு நகரின் தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதை காணமுடிகின்றது.

மட்டக்களப்பு நகரின் பெரும்பாலான பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன் மக்களின் குடியிருப்புகளுக்குள்ளும் வெள்ள நீர் புகுவதன் காரணமாக மக்கள் பெரும் கஸ்டங்களை எதிர்கொண்டுவருகின்றனர்.

குறிப்பாக நாவற்குடா, நொச்சிமுனை, பூநொச்சிமுனை, வேலூர், கூழாவடி, மாமாங்கம், கறுவப்பங்கேணி, சீலாமுனை, உப்போடை, இருதயபுரம் என மாநகரத்திற்குட்பட்ட பெரும்பாலான பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் பல பகுதிகளில் பயணிக்கமுடியாத சூழ்நிலையேற்பட்டுள்ளது.

இதேநேரம் மட்டக்களப்பு மாநகரசபையினால் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெள்ள நீரை வழிந்தோடச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் தாழ்நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் மக்கள் இடம்பெயரும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

படுவான்கரையின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன் மண்டூர்-வெல்லாவெளி, வவுணதீவு - மட்டக்களப்பு, மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பிரதான வீதிகள் ஊடாக வெள்ள நீர் பாய்வதன் காரணமாக போக்குவரத்து செய்பதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை பெய்துவரும் மழை காரணமாக வயல் நிலங்களும் பெருமளவில் அழிவடைந்துள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

முகத்துவாரம் கடந்த இரண்டு மாதங்களுக்கு வெட்டப்பட்டுள்ளதன் காரணமாக வெள்ள நீர் கடலுக்குள் செல்லும் நிலையுள்ளதனால் வெள்ள நிலைமை குறையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளபோதிலும் தொடர்ந்தும் மழை பெய்வதன் காரணமாக வெள்ள நிலைமை அதிகரித்துவருகின்றது.

## பண்டிகைக் காலத்தில்...

தலைவரும்

இராணுவத் தளபதியுமான லெப்டினென்ட் ஜெனரல் சவேந்திர சில்வா விளக்கமளித்துள்ளார்.

ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைத் தவிர வேறு பகுதிகளை பண்டிகைக் காலத்தில் தனிமைப்படுத்தும் எண்ணம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலகட்டத்தில் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்கும் எண்ணமும் இல்லை. அவசியம் தேவைப்பட்டால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்.

இலங்கையில் கொரோனா தொற்று நோயைக் கட்டுப்படுத்த ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார் எனவும் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

# இலங்கைக்கு வரும் பயணிகளுக்கான நடைமுறைகளின் திருத்தம்

2020 ஆம் ஆண்டு மார்ச் முதல் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கைக்கு வரும் பயணிகளுக்கான நடைமுறையில் மேலும் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் குறித்த நடைமுறை எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிந்துள்ளது.

வெளிநாட்டு அமைச்சு, குடிவரவு மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் ஆகியவற்றின் இணைந்த தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் 26 ஆம் திகதி முதல், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர்கள், நோயாளிகள், குறுகிய கால வீசாக்களையுடையவர்கள், அரசாங்க மற்றும் இராணுவ அதிகாரிகளுக்காக, அரசாங்க தனிமைப்படுத்தல் வசதிகளுக்கான விஷேடமான மீளழைத்துவரும் விமானங்களை வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து இலங்கை அரசாங்கம் (வெளிநாட்டு அமைச்சு மற்றும் கோவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம்) ஏற்பாடு செய்யும்.

i. எவ்வாறாயினும், கோவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் அங்கீகாரம் / ஆலோசனையின் அடிப்படையில் சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட விமானமொன்றில் பயணிகள் நியமிக்கப்பட்ட ஹோட்டலொன்றில் கட்டணம் செலுத்திய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதற்கான இணக்கப்பாட்டின் அடிப்படையில், இலங்கையர்கள் அல்லது இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த வெளிநாட்டினர் (இரட்டைக் குடியுரிமையுடையவர்கள்) இலங்கைக்கு எந்தவொரு வணிக / மீளழைத்து வராத விமானங்களிலும் வெளியுறவுச் செயலாளர் (அல்லது) சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுமதியின்றி பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

ii. மேற்கண்ட ஏற்பாட்டின் கீழ் விமானத்தில் அனுமதிக்கப்பட்ட பயணிகள் கட்டணம் செலுத்தும் தனிமைப்படுத்தலை கட்டாயமகாக் கடைபிடிப்பதனை உறுதி செய்வது சம்பந்தப்பட்ட விமானத்தின் முழுமையான பொறுப்பாகும்.

புதிய வழிகாட்டுதல்களுக்கு அமைவான மேலதிக மதிப்பீடுகளின் அடிப்படையில், விஜயம் செய்யும் பயணிகளுக்கான நடைமுறைகளின் திருத்தம் மேலாய்வுக்கு உட்படுத்தப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# கொரோனா மரணம் 181ஆகி உயர்வு!

நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளான மேலும் ஐவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 181 ஆக அதிகரித்துள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலை கைதியான 68 வயதான ஆண், கொழும்பு 15ஐச் சேர்ந்த 55 வயதான ஆண், தர்கா நகர் பகுதியைச் சேர்ந்த 77 வயதான ஆண், மக்கொன பகுதியைச் சேர்ந்த 63 வயதான ஆண், கொழும்பு 10ஐச் சேர்ந்த 83 வயதான ஆண் ஆகியோரே இவ்வாறு கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

01.வெலிக்கடை சிறைச்சாலை கைதியான 68 வயதான ஆண் ஒருவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்றால் ஏற்பட்ட நிமோனியா காரணமாக டிசம்பர் 17 ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

02.கொழும்பு 15ஐச் சேர்ந்த 55 வயதான ஆண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்றால் ஏற்பட்ட நிமோனியா மற்றும் சிறுநீரக நோயால் டிசம்பர் 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

03.தர்கா நகர் பகுதியைச் சேர்ந்த 77 வயதான ஆண் கொரோனா தொற்றால் இரத்தம் விஷமானது மற்றும் மாரடைப்பால் டிசம்பர் 18 ஆம் திகதி வீட்டிலே உயிரிழந்துள்ளார்.

04.மக்கொன பகுதியைச் சேர்ந்த 63



வயதான ஆண் கொரோனா தொற்றால் இரத்தம் விஷமானது, நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் மாரடைப்பால் 19 ஆம் திகதி வீட்டிலே உயிரிழந்துள்ளார்.

05.கொழும்பு 10 ஐச் சேர்ந்த 83 வயதான ஆண் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டதை அடுத்து ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்றால் ஏற்பட்ட நிமோனியா காரணமாக 20ஆம் திகதி வீட்டிலே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் மேலும் 370 பேர் கொரோனா தொற்றாளர்களாக நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டனர்.

இதனையடுத்து இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 37 ஆயிரத்து 631 ஆக பதிவாகியுள்ளது.

அவர்களில் 28 ஆயிரத்து 682 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 8 ஆயிரத்து 779 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

# தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம்: ரஜினிக்கு அழைப்பாணை

தூத்துக்குடி துப்பாக்கி சூடு சம்பவம் தொடர்பாக விசாரித்து வரும் ஆணையத்தில் எதிர்வரும் 19ம் திகதி முன்னிலையாகுமாறு நடிகர் ரஜினிகாந்த்துக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் கடந்த 2018ஆம் ஆண்டு மே மாதம் 22ம் திகதி ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தின் போது வன்முறை வெடித்தது.

இதன்போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது.



இதுவரை 23 கட்டங்கள் விசாரணை நடைபெற்றுள்ள நிலையில், 24ஆவது கட்ட விசாரணை தூத்துக்குடியில் உள்ள விருந்தினர் மாளிகை முகாம் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த விசாரணை ஜனவரி 19ம் திகதி தொடங்கவுள்ளது. இந்த நிலையில், இந்த விசாரணைக்கு முன்னிலையாகுமாறு நடிகர் ரஜினிகாந்துக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

ஸ்டெர்லைட் எதிர்ப்பு போராட்டத்தின் பின்னணியில் சமூக விரோதிகள் இருப்பதாக ரஜினி கூறியிருந்தார். இதுதொடர்பாக அவரிடம் ஆணையம் விசாரணை நடத்தவுள்ளது.

இதற்கு முன்பு ரஜினிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டபோது அவர் நேரில் முன்னிலையாகவில்லை. ரஜினிகாந்த் நேரில் முன்னிலையாகாதது குறித்து விசாரணை ஆணையத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து அவருக்கு நேரில் முன்னிலையாவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திவுலபிட்டிய - பேலியகொட கொத்தணியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்தைக் கடந்தது

திவுலபிட்டிய - பேலியகொட கொத்தணியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 954 ஆக உயர்ந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மேலும் 370 பேர் கொரோனா தொற்றாளர்களாக நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டனர்.

அதில் 364 பேர் திவுலபிட்டிய - பேலியகொட கொத்தணியில் நெருங்கிய தொடர்புகொண்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, திவுலபிட்டிய - பேலியகொட கொத்தணியில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 954 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த 06 பேர் கொரோனா தொற்றாளர்களாக நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 37 ஆயிரத்து 631 ஆக உயர்ந்துள்ளது.

அவர்களில் 28ஆயிரத்து 682 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 8 ஆயிரத்து 779 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

இதேநேரம், இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 176 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானியாவில் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வகை வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம்

பிரித்தானியாவில் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வகை கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவுவதற்கான அபாயம் உள்ளதாக நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே இது குறித்து தீவிர அவதானத்துடன் இருக்க வேண்டும் என அரச வைத்திய ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், மிகவும் வேகமாகப் பரவிவரும் இந்த வைரஸின் புதிய உருமாற்றம் விசேடமானது என சிரேஷ்ட வைத்திய ஆய்வக தொழில்நுட்ப நிபுணர் கீர்த்தி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பிரித்தானியா போன்ற நாட்டிலிருந்து நபர்கள் வருகை தரும்போதும் அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போதும் அந்த வைரஸ் பரவக்கூடிய அபாயம் உள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது இந்த வைரஸ் பரவல் காரணமாக ஐரோப்பிய நாடுகளும் இந்தியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இஸ்ரேல் போன்ற நாடுகளும் பிரித்தானியாவுக்கான விமானப் பயணங்களை இரத்து செய்துள்ளன.

இதனிடையே கொரோனா வைரஸின் இந்த புதிய உருமாற்றம் அவுஸ்ரேலியா, டென்மார்க் முதலான நாடுகளிலும் அவதானிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.